தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24231 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. ர. தனபாலன்,<br>த/பெ. ரங்கசாமி கவுண்டர்,<br>மொட்டையகவுண்டர் காடு,<br>ஆட்டையாம்பட்டி மெயின் ரோடு,<br>வெண்ணந்தூர் அஞ்சல்,<br>நாமக்கல் மாவட்டம் – 637 505. |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர் /<br>செயல் அலுவலர்,<br>வெண்ணந்தூர் பேரூராட்சி அலுவலகம்,<br>வெண்ணந்தூர் அஞ்சல்,<br>நாமக்கல் மாவட்டம் – 637 505. |

------

மனுதாரர் திரு. ர. தனபாலன் மற்றும் திரு. வி. சேகர், பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர், வெண்ணந்தூர் பேரூராட்சி, வெண்ணந்தூர், நாமக்கல் மாவட்டம் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 06.07.09 அன்று 13 இனங்களில் சில உட்பிரிவுகளில் தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மனுதாரருக்கு 05.08.09 அன்று தகவல்கள் தரப்பட்டுள்ளன. 06.08.09 அன்று மனுதாரர் குறிப்பிட்ட இனங்களில் தகவல் தரப்படவில்லை என்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 25.09.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் ஒரு சில இனங்களுக்கு தகவல் கேட்டிருந்தும் குறிப்பிட்டு தொகை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் கூற்றுப்படி ஒரு சில அளவீடுகளும், தரம் வாய்ந்ததா என்ற விவரங்கள் தாம்

கேட்டிருப்பதாகவும் எந்த அலுவலக ஆவணங்களின் நகலையும் தகவலாக கேட்கவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் மனுதாரர் அவ்வப்போது மனுக்களுக்கு தகவல் தரப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் குறிப்பிட்டு இந்த மனுவில் கேட்கப்பட்ட இனங்களுக்கு தகவல் தரப்படவில்லை என்றும் வேறு சில மனுக்களுக்கு தகவல் தரப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரருக்கு தகவல் தரப்படாததது குறித்து விசாரிக்கப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்டு இனம் 1 (a), 1(b), 1(c), 5(a) முதல் 5(g) முடிய, 7, 9 மற்றும் 10–க்கு தகவல் தரப்படவில்லை என்று தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்றுக்கொண்டது. இனம் 11–ல் மனுதாரர் ஆர்.சி. நகலை கேட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் ஆர்.சி. நகல் என்று கேட்டுள்ளது மனுதாரர் எதை கேட்கின்றார் என்று தெளிவாக தெரியவில்லை என்று விசாரணையில் தெரிவித்தார். மனுதாரர் விசாரணையில் ஒப்பந்தக்காரர்கள் புதுப்பித்த நகலை தான் ஆர்.சி என கேட்டதாக தெரிவித்தார். இது குறித்த தகவல் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

> மனுதாரருக்கு இனம் 1 (a), 1(b) மற்றும் 1(c), 5 (a) முதல் 5 (g) வரையிலும், 7, 9, 10 மற்றும் 11–க்கு உரிய தகவலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் இலவசமாக அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**( சு. மோகன தாஸ் )**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 24231/09</u>**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர்,**
**வெண்ணந்தூர் பேரூராட்சி அலுவலகம்,**
**வெண்ணந்தூர் அஞ்சல்,**
**நாமக்கல் மாவட்டம் – 637 505.**

**திரு. ர. தனபாலன்,**
**த/பெ. ரங்கசாமி கவுண்டர்,**
**மொட்டையகவுண்டர் காடு,**
**ஆட்டையாம்பட்டி மெயின் ரோடு,**
**வெண்ணந்தூர் அஞ்சல்,**
**நாமக்கல் மாவட்டம் – 637 505.**